ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2272/51 - 2022 මාර්තු මස 25 වැනි සිකුරාදා - 2022.03.25
2272/51 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ல/பிசெ/3/3/5/2/17.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/99/FR/380.

மொரகஹகந்த /களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கு வேண்டிய தான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக் கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு பகிரங்கத் தேவை என்பது நக்ல்ஸ் வனபாதுகாப்பு வலயத்திற்கான காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், லக்கல பிரதேச செயலாளர் பிரிவிலே, E 385 பிட்டவல கிராம அலுவலர் பிரிவிலே பிட்டவல கிராமத்தில் அமைந்துள்ள கோனமடவத்த எனும் காணி, நில அளவையாளர் நாயகத்தினால் 2021.07.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட பூ.வ. 1843 இல் துண்டு இல. 01 இல் காட்டப்பட்டுள்ள 2.0234 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டின் விபரங்கள் :

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர் : கோனமடவத்த; விபரம் : காடு; உரிமை கோருபவரின் பெயர் மற்றும் முகவரி : கண்டி, அஸ்கிரிய, தொடம்வல மாவத்தை, இல. 71/23C என்ற முகவரியில் வதியும் திரு. ரொஹான் நலின் எளிகேவல; விஸ்தீரணம் : 2.0234 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு லக்கல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2022 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ். விஜயகுமார்,
பிரதேச செயலாளர்,
லக்கல.

பிரதேச செயலகம்,
லக்கல,
2022, மாச்சு 21.

EOG 3 - 0995